# P.L.RAJ IAS & IPS ACADEMY

Building Bureaucrats Since 2006

## June 19, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. 17-ஆவது தமிழக சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடர் காலை 10 மணிக்கு தொடங்கியது. உரையாற்ற பேரவைக்கு வந்த ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகரை முதல்வர் ஜோசப் விஜய் வரவேற்றார்.

ஆளுநர் ஆற்றிய உரை - முக்கிய அம்சங்கள்

(i) தமிழகத்தில் மலிந்து கிடக்கும் ஊழலை வேரோடு அறுத்து நேர்மையான நிர்வாகத்தை அளிக்க தமிழக அரசு உறுதியாக உள்ளது. அனைத்துத் துறைகளிலும் கொள்முதல், ஒப்பந்தப்புள்ளிகள் வெளிப்படையாக்கப்படும். இடைத்தரகர்கள் தலையீடு முற்றிலும் ஒழிக்கப்படும்.

(ii) பிரதமர் மோடியை முதல்வர் ஜோசப் விஜய் அண்மையில் சந்தித்து ஒசூரில் வான்வழி அமைப்பு மையத்தை அமைக்க வேண்டும்; தமிழகத்துக்குத் தேவையான நிதியுதவி உள்பட பல்வேறு வளர்ச் சித் திட்டங்களை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இவற்றை மத்திய அரசு அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) கீழடி, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, சிவகளை, அழகன்குளம், அரிக்க மேடு, சலுவன்குப்பம், பூம்புகார் ஆகிய பகுதிகளில் தொல்லியல் துறை ஆராய்ச்சி மேற்கொள்ளவும், கீழடி, ஆதிச்சநல்லூரில் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னமாக அங்கீகாரம் பெற நடவடிக்கை.

(iv) இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் நீண்ட கால பிரச்னையைத் தடுக்க மத்திய அரசை தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

(v) மீனவர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(vi) சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடும் மொழியாக்கவும், உச்சநீதிமன்றக் கிளையை சென்னையில் அமைக்கவும் மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

(vii) இயற்கை வளங்களையும், சுற்றுச்சூழல் சமநிலையையும் பேண விரிவான நிலையான சுற்றுலாக் கொள்கை வகுக்கப்படும்.

(viii) 2031- ஆம் ஆண்டுக்குள் நகர்ப்புறச் சிறப்பிற்கான நாட்டின் முன்மாதிரி மாநிலமாக தமிழகம் திகழும்.

(ix) மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் தூய்மையான குடிநீர் விநியோகம், எண்ம நிர்வாகம் அடுத்த ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

(x) அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்களின் நலன்கள் தொடர்ந்து பாதுகாக்கப்படும்.

2. பிரதமரின் வளர்ச்சியடைந்த பாரதத்துக்கான வேலைவாய்ப்பு ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் முதல் முறையாக வேலையில் சேர்ந்தவர்கள், வேலை வழங்குநர்களுக்கு

ரூ.2,400 கோடி ஊக்கத்தொகையை நேரடி பலன் பரிமாற்ற முறையில் பிரதமர் நரேந்திர மோடி தில்லியில் வழங்குகிறார்.

(i) இதற்காக சென்னை உள்பட நாடு முழுவதும் 200 இடங்களில் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் நேரலை நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ii) நேரடிப் பலன் பரிமாற்றத்தின் கீழ் வழங்கப்படும் இந்த ஊக்கத் தொகை 15 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்பை வழங்க உதவியாக இருக்கும்.

(iii) தமிழ்நாட்டில் சென்னை, கோவை, வேலூர், திருவள்ளூர், திருப்பூர், சேலம், கிருஷ்ணகிரி, திருச்சி, மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் புதுச்சேரியில் நடைபெறும் நிகழ்ச்சிகளில், 60,000 பேர் சுமார் ரூ.36 கோடி மதிப்பிலான வேலைவாய்ப்பு ஊக்கத்தொகை பெறஉள்ளனர். சுமார் 4,000 வேலை வழங்குநர்களுக்கு ரூ.125 கோடி மதிப்பிலான ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

3. அமெரிக்க மத்திய வங்கியான ஃபெடரல் ரிசர்வ்', தனது வட்டி விகிதங்களை மாற்றமின்றி 3.50 முதல் 3.75 சதவீதம் என்ற அளவிலேயே நீட்டிப்பதாக அறிவித்துள்ளது.

(i) மத்திய கிழக்கு போரின் எதிரொலியாக உலகளாவிய விநியோகச் சங்கிலி பாதிப்பால் அமெரிக்காவின் பணவீக்கம் 4.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த நெருக்கடி சூழலில், அமெரிக்க மத்திய வங்கியின் புதிய தலைவராக பொறுப்பேற்றுள்ள கெவின் வார்ஷ் தலைமையில் நடைபெற்ற முதல் 'எஃப்ஓஎம்சி' குழு வின் 2 நாள்கள் கூட்டம் நிறைவடைந்தது. பொருளாதாரத்தை சீராகக் கொண்டு செல்லும் நோக்கில், வட்டி விகிதத்தை மாற்றியமைக்காமல் தக்கவைப்பது என குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

4. ஈரான் - அமெரிக்கா இடையே போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதி ஒப்பந்தம் இரு தரப்பிலும் மின்னணு முறையில் கையொப்பமிடப்பட்டது. அமைதி ஒப்பந்தத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பும், ஈரான் அதிபர் மசூத் பெஸெஷ்கியானும் கையொப்பமிட்டனர்.

(i) இந்த ஒப்பந்தத்தில், இரு நாடுகளிடையே மத்தியஸ்தராக செயல்பட்ட பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் உத்தரவாத கையொப்பமிட்டார்.

(ii) 'இஸ்லாமாபாத் ஒப்பந்தம்' என்ற பெயரிலான இந்த அமைதி ஒப்பந்தம் முறையாக நிறைவேற்றும் நிகழ்வு ஸ்விட்சர்லாந்தில் ஜெனீவா நகரில் வெள்ளிக்கிழமை (ஜூன் 19) நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில், அமெரிக்க, ஈரான் தலைவர்கள் மட்டுமின்றி, மத்தியஸ்தர்களாக செயல்பட்ட பாகிஸ்தான், கத்தார் நாடுகளின் தலை வர்களும் பங்கேற்க உள்ளனர்.

(iii) மின்னணு கையொப்பம்:

- ஜி7 நாடுகள் கூட்டமைப்பின் வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்க பிரான்ஸ் சென்ற டிரம்ப், அங்கிருந்தபடி அமைதி ஒப்பந்தத்தில் மின்னணு முறையில் கையொப்பமிட்டதோடு, அது குறித்த அறிவிப்பையும் வெளியிட்டார்.
- இந்த 'இஸ்லாமாபாத்' ஒப்பந்தம் கையொப்பமானதைத் தொடர்ந்து, முதல் நடவடிக்கையாக முக்கிய சர்வதேச கப்பல் வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையை

ஈரான் உடனடியாக திறக்கும். அதுபோல, ஈரான் துறை முகங்களை முற்றுகையிட்டு நிறுத்திவைக்கப்பட்டுள்ள போர் கப்பல்களை அமெரிக்கா உடனடியாக திரும்பப்பெறும் என்று குறிப்பிட்டார்.

(iv) பாகிஸ்தான் உத்தரவாதம்:

- அமைதி ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் உத்தரவாத கையொப்பிட்டுள்ளது.

5. ஜனநாயகப்படுத்தப்பட்டால் மட்டுமே தொழில்நுட்பம் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

(i) ஆந்த்ரோபிக் செயற்கை மாதிரிகளை (ஃபேபிள் 5, மித்தோஸ் 5) வெளிநாட்டினர் பயன்படுத்த அமெரிக்கா அண்மையில் தடை விதித்த நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(ii) ஐரோப்பாவின் மிகப்பெரும் தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க ஆலோசனைக் கூட்டமாக கருதப்படும் 'விவாடெக் -2026 தொழில்நுட்ப மாநாடு பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெற்றது. இதில் அந்நாட்டு அதிபர் இமானுவல் மேக்ரானுடன் பிரதமர் மோடி கலந்துகொண்டார்.

6. புது தில்லியில் ஜூன் 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் (என்எஸ்ஏ) மாநாட்டில் சீனா வெளியுறவு அமைச்சர் வாங் யி பங்கேற்பதாக அந்நாடு தெரிவித்தது.

(i) இந்தியா சீனா, ரஷியா உள்ளிட்ட 11 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட பிரிக்ஸ் கூட்டமைப்புக்கு நிகழாண்டு இந்தியா தலைமை தாங்குகிறது. இதன் ஒரு பகுதியாக தில்லியில் நடை பெறும் பிரிக்ஸ் என்எஸ்ஏ மாநாட்டில் பங்கேற்பது குறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் கூறியதாவது:

- இந்தியாவின் அழைப்பை ஏற்று பிரிக்ஸ் என்எஸ்ஏ மாநாட்டில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி பங்கேற்கிறார்.
- பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தெற்குலகின் குரலாக முன்னின்று உலக அமைதி, பாதுகாப்பு ஒத்துழைப்பு, சமத்துவ நிர்வாகம் மற்றும் பன் முகத்தன்மையை உறுதிப்படும் வலுவான அமைப்பாக பிரிக்ஸ் திகழ்கிறது என்றார்.
- இந்தியா-சீனா எல்லை விவகார சீன சிறப்பு பிரதிநிதியாகவும் உள்ள வாங் யி, இந்திய பயணத்தின்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவலை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. முதல்கட்டமாக தமிழக நதிகளை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் தென் மாநிலங்களில் உள்ள நதிகளை இணைக்க மத்திய அரசை வலியுறுத்தப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(i) மேலும், டெல்டா மாவட்டங்களின் நீர் ஆதாரமான காவிரி நீரை தமிழகத்துக்கு வழங்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும், உபரிநீரை மட்டும் கர்நாடகம் வழங்குகிறது. இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதைத் தடுக்க சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கடலுக்குச் செல்லும் நீரைத் தடுக்க தமிழகத்தில்

தடுப்பணைகள் கட்டப்படும்.

(ii) முல்லைப் பெரியாறு:

- தென் மாவட்டங்களின் உயிர்நாடியாக உள்ள முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடியில் இருந்து 152-ஆக உயர்த்த உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- அங்கு புதிய அணையை கட்டும் கேரள அரசின் முயற்சியை தடுத்து, நீர்மட்டத்தை உயர்த்தவும் உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதத்தில் குறிப்பிடத்தக்க சரிவு மற்றும் விரைவான வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்கள்.

(i) பயங்கரவாதத்தில் குறிப்பிடத்தக்க சரிவு

- மே 2026-ல் ஒரு முக்கிய மைல்கல் எட்டப்பட்டது; அந்த மாதத்தில் ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதத்தால் உயிரிழப்புகள் ஏதுமில்லை என்று அறிக்கைகள் தெரிவித்தன.
- வரலாற்று ரீதியாக, குளிர்காலம் முடிந்து மே மாதம் வரும்போது பயங்கரவாதத் தாக்குதல்கள் அதிகரிக்கும் போக்கு இருந்தது; இருப்பினும், அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பயங்கரவாத அமைப்புகளில் ஆள் சேர்ப்பதையும் தாக்குதல்களையும் வெற்றிகரமாகக் குறைத்துள்ளன.
- 'தெற்காசிய பயங்கரவாத இணையதளத்தின்' (South Asia Terrorism Portal) தரவுகள், கடந்த காலங்களில் மே மாதத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளில் பெரும் சரிவைக் காட்டுகின்றன—அதாவது 2001-ல் 300 மற்றும் 2000-ல் 288 உயிரிழப்புகள் இருந்த நிலையில், 2025-ல் 14 ஆகவும், இறுதியாக 2026-ல் பூஜ்ஜியமாகவும் குறைந்துள்ளன.

(ii) பண்டிட் சமூகத்தினரின் வருகை மற்றும் ஒருங்கிணைப்பு

- 1990-களில் வெளியேறிய பண்டிட் சமூகத்தினரை மீண்டும் ஈடுபடுத்தும் வகையில், ஜூன் 6 முதல் 14, 2026 வரை ஸ்ரீநகரில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- பண்டிட் சமூகத்தினர் தங்கள் தாயகத்திற்குத் திரும்பி குடியேறும் வரை காஷ்மீரின் அடையாளம் முழுமையடையாது என்று முதல்வர் ஆலோசகர் நசீர் அஸ்லம் வானி உள்ளிட்ட அதிகாரிகள் வலியுறுத்தினர்.
- இந்தியா மற்றும் அமெரிக்கா முழுவதிலுமிருந்து வந்த பண்டிட் அமைப்புகள், மார்தாண்ட் சூரியக் கோயில் மற்றும் கீர் பவானி கோயில் போன்ற பாரம்பரியச் சின்னங்களுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தன.
- ஓய்வுபெற்ற பிரிகேடியர் ஒருவர் பாதுகாப்புச் சூழலில் ஏற்பட்டுள்ள பெரும் மாற்றத்தைக் குறிப்பிட்டார்; முன்பு பதற்றம் நிறைந்த பகுதியாக இருந்த சோபோர் (Sopore) போன்ற இடங்களுக்கு ஆயுதங்களோ அல்லது பலத்த பாதுகாப்போ இன்றிச் செல்ல முடிவதைக் கண்டு அவர் வியப்பு தெரிவித்தார்.

(iii) வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பை நோக்கிய மாற்றம்

- 2014-ல் 370-வது பிரிவு நீக்கப்பட்டதிலிருந்து, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுடன் பெரிய அளவிலான வளர்ச்சிப் பணிகளுக்கும் அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.
- கடந்த பத்தாண்டுகளில், ரஜௌரி, பாரமுல்லா மற்றும் அனந்த்நாக் ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரிகளும், ஜம்முவில் ஒரு IIM-ம் நிறுவப்பட்டுள்ளன.

- நெடுஞ்சாலைத் திட்டங்களில் சுமார் ₹15,760 கோடி முதலீடு செய்யப்படுகிறது. செனாப் ஆற்றின் குறுக்கே உலகின் மிக உயரமான பாலம் (1,178 அடி) மற்றும் உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா ரயில் இணைப்பு ஆகியவை குறிப்பிடத்தக்க சாதனைகளாகும்.
- ஜம்மு தாவி மற்றும் ஸ்ரீநகர் இடையே இரண்டு ஜோடி வந்தே பாரத் ரயில்கள் ஏப்ரல் 30, 2026 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

(iv) முக்கிய மைல்கல்: ஜோஜிலா சுரங்கப்பாதை

- ஜோஜிலா சுரங்கப்பாதைக்கான பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. 11,578 அடி உயரத்தில், 13.14 கி.மீ நீளத்தில் அமைந்துள்ள இது, இவ்வளவு நீளம் கொண்ட சுரங்கப்பாதைகளிலேயே உலகின் மிக உயரமான சுரங்கப்பாதையாகும்.
- ₹6,800 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இந்தச் சுரங்கப்பாதை, அனைத்துக் காலநிலையிலும் போக்குவரத்தை உறுதி செய்யும்; இதன் மூலம் குளிர்காலத்தில் 4 முதல் 5 மாதங்களுக்கு லடாக் மற்றும் காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிகள் துண்டிக்கப்படுவது தவிர்க்கப்படும்.
- இத்திட்டம் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் நாட்டின் பாதுகாப்பு ஆகிய இரண்டிற்கும் ஒரு "வரப்பிரசாதமாக" கருதப்படுகிறது.

(v) முடிவுரை: அமைதி நிறைந்த ஒரு புதிய சகாப்தம்

- பயங்கரவாதச் செயல்கள் குறைந்து வருவது, உள்ளூர் மக்கள் இப்போது வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் ஏற்றுக்கொண்டுள்ளதையே காட்டுகிறது.
- காஷ்மீர் மக்களும் இந்தியாவின் பிற பகுதி மக்களும் இப்பகுதியில் நிரந்தர அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை கொண்ட ஒரு எதிர்காலத்தை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர்.